IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, GUDIYATTAM,
VELLORE DISTRICT.

**CC.No. 144/2020**

| **DEPOSITION OF WITNESS** | **PW.2** |
|---|---|

| NAME | பூபதி |
|---|---|

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 09.01.2024

**( எதிரி ஆஜர் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)**

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

1.நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை. நான் புகார்தாரர் சொக்கலிங்கம் அழைத்ததின் பேரில் நான் சாட்சியம் சொல்ல வந்துள்ளேன். புகார்தாரர் சொக்கலிங்கம் எப்போது என்னை அழைத்தார் என்று ஞாபகம் இல்லை. எத்தனை மணிக்கு எந்த கிழமையில் அழைத்தார் என்று ஞாபகம் இல்லை

2. என்னை புகார்தாரர் சொக்கலிங்கம் தான் அழைத்து வந்தார். எனது பெயர் மற்றும் முகவரி கேட்டனர் சாட்சியம் அளித்தேன். நான் கையெழுத்து எதுவும் போடவில்லை.

3.புகார்தாரர் சொக்கலிங்கம் என்னை அழைத்த போது நான் நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வராமல் நான் வரமாட்டேன் என்று சொல்ல வில்லை.

4.எதிரி ஜெயசங்கருக்கும் புகார்தாரர் சொக்கலிங்கத்திற்கும் என்ன வழக்கு நீதிமன்றத்தில் உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. வீடு வாங்குவது சம்பந்தமாக வழக்கு உள்ளதாக புகார்தாரர் சொக்கலிங்கம் என்னிடம் கூறினார். அவர் கூறாமல் எனக்கு நேரடியாக தெரியாது. நான் எந்த வீடு என்று நேரடியாக பார்த்தது இல்லை.

5.அந்த வீட்டின் சர்வே எண், ஊர் பெயர், கட்டிடத்தின் பெயர் கதவு எண், அந்த வீட்டின் அளவு எந்த விதமான கட்டிடம் என்று எனக்கு தெரியாது. என்றால் சரிதான்.

6.வீடு வாங்குவதற்கு பேசி முடித்து விட்டோம் என்று அக்டோபர் மாதம் கூறினார். 27 லட்சத்து 50 ஆயிரத்திற்கு வீடு பேசி முடித்து விட்டதாக அதற்கு என்னை சாட்சியாக அழைத்து கையொப்பம் போடுமாறு கூறினார் நான் சாட்சியாக முதல் கையெழுத்து போட்டேன். 31.12.2018 க்குள் பத்திர பதிவு செய்து விடுவதாக கூறினார்.

7. புகார்தாரர் சொக்கலிங்கத்திற்கு நான் ஜூனியராக இருந்தேன் என்றால் சரியல்ல. நான் வேலூர் வனத்துறையில் பணிபுரிந்தேன். நானும் புகார்தாரர் சொக்கலிங்கமும் 1986 லிருந்து ஒரே துறையில் வேலை செய்வதால் பழக்கம்.

8. நாங்கள் இருவரும் வெவ்வேறு ஊரைச் சேர்ந்தவர்கள். தற்பொழுது இருவரும் குடியாத்தத்தில் வசித்து வருகிறோம்.

9. நானும் புகார்தாரர் சொக்கலிங்கமும் பைனாசின் பங்குதாரர்கள் என்றால் சரியல்ல. தினமும் நாங்கள் சந்திப்போம் என்றால் சரியல்ல. சந்தர்ப்பம் கிடைக்கும் போது தான் சந்திப்போம்.

10. 08.10.2018 ஆம் தேதி காலை 11.00 மணிக்கு என்னை இருவரும் அழைத்தார்கள் குடியாத்தம், கோபாலபுரத்தில் உள்ள சீனிவாச டிம்பர் அலுவலகத்திற்கு நான் சென்றேன்.

11.நான் எனது பிரமாண வாக்கு மூலத்தில் சொக்கலிங்கம் மட்டும் தான் என்னை அழைத்தார் என்று குறிப்பிட்டிருந்தால் அது தவறு என்றால் சரிதான். இருவரும் என்னை அழைத்தார்கள்.

12.என்னை யார் என்று ஜெயசங்கருக்கு தெரியாது என்றாலும் அப்படி இருக்கும் பட்சத்தில் ஜெயசங்கர் என்னை அழைத்தார் என்று கூறுவது பொய் என்றால் சரியல்ல.

13.எதிரி ஜெயசங்கர் எனக்கு தெரியாது என்றாலும், அவர்அழைத்தார் என்று சொல்வது பொய் என்று சொல்வது என்றாலும் இந்த நீதிமன்றத்தில் தான் ஜெயசங்கர் என்னை முதன் முதலில் பார்த்தார் என்றால் சரியல்ல. புகார்தாரர் சொக்கலிங்கத்தை தெரிந்த 5 ஆண்டுகள் கழித்து ஜெயசங்கரை எனக்கு தெரியும் அவரிடம் தான் எனது வீட்டிற்கு தேவையான அனைத்து மரங்களையும் வாங்கினேன்.

14.எதிரி ஜெயசங்கதிடம் தான் எனது வீட்டிற்கு தேவையான மரங்களை வாங்கினேன் என்பதற்கு ஆதரமாக ரவீதுகள் தாக்கல் செய்தார் தான் உண்மை தெரியவரும் என்றால் எனது வீடு கட்டி சுமார் 20 ஆண்டுகள் ஆவதால் ரசீதுகள் என்னிடம் இல்லை.

15. நான் புகார்தாரர் சொக்கலிங்கத்திற்கு வேண்டப்பட்ட நபர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

16. நான் செல்வதற்கு முன்பே விலை பேசி நிர்ணயம் செய்துவிடமாட்டார்கள் அதன் பின்பு தான் நான் சென்றேன்.

17.நான் எனது முதல் பிரமாண வாக்கு மூலத்தில் நான் சென்ற பிறகு தான் விலை பேசி நிர்ணயம் செய்தார்கள் என்று குறிப்பிட்டு விட்டு தற்போது நான் செல்வதற்கு முன்பே விலை பேசி முடித்து விட்டார்கள் என்று சாட்சியம்அளிப்பது பொய் என்றால் சரியல்ல. நான் செல்வதற்கு முன்பும் விலை பேசினார்கள் நான் சென்ற பின்பும் விலை பேசினார்கள்.

18.நான் செல்வதற்கு முன்பு யார் யார் விலை பேசினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் அவர்கள் இருவரும் தான் விலை பேசினார்ககள் நான் சென்ற பிறகு என்னடம் கூறினார்கள்.

19.எதன் அடிப்படையில் வீடு விலை பேசப்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

20.எதிரி ஜெயசங்கர் கிரையம் வாங்கிய பத்திரத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். எதிரி ஜெயசங்கர் என்ன விலைக்கு, எந்த தேதியில் அந்த சொத்தை வாங்கினார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

21.அக்ரிமென்ட் போட்டதாக சொல்லப்படும் சொத்தினுடைய அன்றைய தேதியில் அன்றைய மார்க்கெட் மதிப்பு என்னவென்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அன்று என்ன கிழமை என்று எனக்கு ஞாபகம் இல்லை.

22.எனக்கு 3 மகன் மற்றும் 1 மகள். எனது 3 மகன்களின் பிறந்த தேதி ஞாபகம் இல்லை. பெண்ணின் பிறந்த தேதியும் ஞாபகம் இல்லை.

23.அக்ரிமெண்ட் போட்ட தேதி எப்படி ஞாபகம் உள்ளது என்றால் அன்று நான் சென்றதால் எனக்கு ஞாபகம் உள்ளது.

24.அக்ரிமெண்ட் 11 மணியிலிருந்து 12 மணிக்குள் எழுதப்பட்டது. பத்திர எழுதாளர் ஒருவரை அழைத்தார்கள் அவர் 11.15 மணிக்கு குறித்துக் கொண்டு சென்று 12.00 மணிக்கு தயார் செய்து எடுத்து வந்தார் அவரது பெயர் தெரியாது. சாட்சி மீண்டும் ஞாபகம் இல்லை அவரது பெயர் திருமாறம் என்று சாட்சியம்அளித்துள்ளார்.

25.திருமாறன் எதிரி ஜெயசங்கருக்கு தெரியாது என்றால் சரியல்ல. அவர்கள் இருவரும் தான் திருமாறனை அழைத்து வந்தார்கள்.

26.எனது பிரமணா வாக்கு மூலத்தில் வேறு மாதிரி குறிப்பிட்டு விட்டு தற்பொழுது இருவரும் தான் திருமாறனை அழைத்து வந்தார்கள் என்று சொல்வது சரியல்ல.

27. பத்திர எழுத்தாளர் 12.00 மணிக்கு குறித்துக்கொண்டு எடுத்து வந்தார் என்று பிரமணா வாக்கு மூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. 20 ரூபாய் பாத்திரத்தை முறையீட்டாளர் கொடுத்ததாக எனது முதல் பிரமாண வாக்கு மூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் நான் சொல்லவில்லை.

28. பத்திரத்தை யார் டைப் செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. திருமாறன் தான் எடுத்து வந்தார். அந்த பத்திரம் யாரிடம் வாங்கினார் என்று தெரியாது. சாடசி மீண்டும் பத்திரத்தை புகார்தாரர் சொக்கலிங்கம் கொடுத்தார் அதை அவர் டைப் செய்து எடுத்து வந்தார். அந்த பத்திரத்தில் யார் பெயர் இருந்தது என்று தெரியாது என்றால் சரியல்ல.

29. 05.08.2018 ஆம் வருடம் பத்திரம் வாங்கப்பட்டது. யாரிடம் யார் பெயரில் வாங்கப்பட்டது என்று தெரியாது. எத்தனை பக்கங்கள் டைப் செய்து எடுத்து வந்தார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. எத்தனை பக்கங்களுக்கு இருவரும் கையொப்பம் செய்தார்கள் என்று ஞாபகம் இல்லை. ஆனால் இருவரும் கையொப்பம் செய்தார்கள் என்று சரிதான். நான் எந்த இங்கினால் கையொப்பம் செய்தேன் என்று ஞாபகம் இல்லை.

எனது பிரமணா வாக்கு மூலத்தை நான் சொல்லி தான் வழக்கறிஞர் டைப் செய்து எடுத்து வந்தார் நான் அதில் கையொப்பம் செய்தேன். நான் சொல்லி தான் அவர் தயார் செய்தார்.

30.வழக்கறிஞரின் அலுவலகத்தில் சென்று தான் சொன்னேன் தேதி மற்றும் மாதம் ஞாபகம் இல்லை. நான் வழக்கறிஞர் அலுவலகத்தில் உண்மை அக்ரிமெனட் பார்தேனா என்றால் பார்க்கவில்லை. அசல் அக்ரிமெனட்ட பார்த்தால்அ தான்அதில் எனது கையெபத்து உள்ளது என்று தெரிய வரும் என்றால் சரிதான்.

31.அசல் அக்ரிமென்ட் செய்தால் தான் அது போல் உண்மையில் அக்ரிமென்ட் தயார் செய்தது தெரியவரும் என்றால் சரிதான்.

32.அந்த அக்ரிமென்ட் சொக்கலிங்கத்திடம் உள்ளது என்றால் சரிதான்.

33.அசல் அக்ரிமென்ட் பார்க்காமல் தோராயமாக அதில் கையெழுத்து நான் தான் போட்டேன் என்று வழக்கறிஞரிடம் கூறினேன் என்றால் சரியல்ல. நான் அக்ரிமென்ட்டில் தான் கையொப்பம் போட்டேன்.

34.அக்ரிமென்ட் போட்ட போது பணம் கொடுத்ததை நான் பார்த்தேன் என்றால் நான் பார்த்தேன். பணத்தை சொக்கலிங்கம் ஏற்கனவே எடுத்து வந்து விட்டிருந்தார்.

35.என் முன்பு பேசுவதற்கு மன்பு அவர்கள் எப்பொழுது பேசினார்கள் என்று தெரியாது. 27 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் என்ன நோட்டுகள் இருந்தது என்றால் 500 மற்றும் 100 ரூபாய் நோட்டுகள் இருந்தது நான் அதை எண்ணி பார்க்கவில்லை.

36.அந்த பணத்தை சீனிவாச டிம்பர் மார்ட் அலுவலகத்தில் உள்ள டேபிள் மேல் வைத்ததை அவர் எடுத்துக் கொண்டார். உண்மையாகவே நான் அன்றைய தேதியில் பணத்தை கொடுத்த போது அமைத பார்த்திருந்தால் என்ன பணம் கொடுத்தார்கள் எவ்வளவு பணம் கொடுத்தார்கள்ள ன்ற விவரத்தை கூறியிருப்பேன் என்றாலும் அது போல் எந்த பணமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பணத்தை 12.00 மணிக்குள் கொடுத்து விட்டனர்

37.அக்ரிமென்ட்டில் அவர்கள் எத்தனை கையெழுத்து போட்டார்ககள் என்றும் எந்த இங்கில் போட்டார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. என்னுடன் சாட்சி கையெழுத்து போட்ட முருகனும் அங்கு இரந்தார் அவரும் என்ன இங்கில் கையெழுத்து போட்டார் என்றோ ஆங்கிலத்தில் கையெழுத்து போட்டாரோ தமிழில் போட்டாரோ என்று ஞாபகம் இல்லை எதிரியும் புகார் தாரும் எந்த மொழியில் கையெழுத்து போட்டார்கள் என்று ஞாபகம் இல்லை.

38.அதில் என்ன நிபந்தனைகள் இரந்தது என்று தெரியுமா என்றால் 31.12.2018 க்குள் பத்திர பதிவு செய்யவேண்டும் என்று குறிப்பிட்ருந்தனர் வேறு எந்த நிபந்தனையும் இல்லை. எதற்காக 31.12.2018 நிர்ணயிக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது.

39.ஜெயசங்கரின் சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக நானும் முருகனும் புகார்தாரர் சொக்கலிங்கத்தமின் நெருங்கிய நண்பர் என்ற காரணத்தினாலும் நாங்களாகவே மோசடியாக தயார் செய்யப்பட்ட அக்ரிமென்ட் வைத்து ஜெயசங்கர் சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக தயார் செய்யப்பட்ட அக்ரிமெனட் என்றால் சரியல்ல.

40.உண்மையில் ஒப்பந்தம் போடப்பமட்டிருந்தால் சொத்தின் விவரங்களை குறிப்பிட்ருப்பேன் என்றாலும் என்ன டினாமினேஷனில் பணம் கொடுத்தார்கள் என்று குறிப்பிட்ருப்பேன் என்றாலும் எந்த மையால் கையெழுத்து போட்டார்கள் என்று தெரிவித்திருப்பேன் என்றால் சரியல்ல.

41.திருமாறன் என்பவர் எதிரிக்கு யார் என்று தெரியாது என்றாலும் அவரை உடந்தையாக பயன்படுத்துகிறேன் என்றால் சரியல்ல.

42.எனது பிரமாண பத்திரத்தை தயார் செய்து வெளியில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். எனது முதல் பிரமாண வாக்கு மூலத்தில் என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் சாட்சிகள் என்ற இடத்தில் முதலில் உள்ள கையெழுத்து என்னுடையது ஆகும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் அந்த ஆவணத்தை நான் பார்க்காமல் தான் அந்த கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான்.

43.அசல் ஆவணத்தை என்னிடம் காட்டாத பட்சத்தில் ஏதோ ஒரு ஆவணத்தில் உள்ள முதல் கையெழுத்து என்னுடைய கையெழுத்து

என்று சொல்வது  தவறு என்றால் சரியல்ல. நான் அசல் ஆவணத்தை பார்க்காமல் அதில் உள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்து தவறு என்றால் சரியல்ல.

44.எனது சாட்சி எந்த விதத்தில் ஏற்றுக் கொள்ளக்கூடியது அல்ல என்றாலும் அசல் ஆவணத்தை காண்பித்தால் தான் உண்மை நிலவரம் தெரியவரும் என்றால் சரியல்ல.

45.நான் சொன்ன தேதியில் விற்பனை ஒப்பந்தம் போடப்பட்டதாக சொல்லப்படும் சொத்திற்கு சொத்தின் மீது ஆகிசிஸ் வங்கியில் 47 லட்சமத் ரூபாய் கடன் பெற்றிருக்கும் பட்சத்தில் அதனை 27 லட்டசத்து 50 ஆயிரம் ரூபாய்க்கு விறற்பனை செய்ததாக கூறும் சங்கதி உண்மைக்கு புறம்பானவை என்றால் சரியல்ல.

Taken down by me in open court read
over of the deponent and acknowledged
by her/him to be correct.

Sd/. M.N.Rajananhivarmasiva,
Judicial Magistrate (FAC)
Gudiyatham.